**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,மேட்டூர்**

முன்னிலை: நா.கோபாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

2026 –ம் ஆண்டு மே 14ம் நாள் வியாழக்கிழமை

**பி.ஆர்.சி. எண்.2/2026**

----------

அரசுக்காக : காவல் உதவி ஆய்வாளர்,
நங்கவள்ளி காவல் நிலையம்,
குற்ற எண்.3/2024 .....குற்றமுறையிடுபவர்/ புகார்தாரர்

/எதிர்/

1) ராஜசேகரன், த/பெ.ராமலிங்கம்,
2) ராஜ்குமார் (42), த/பெ.ராமலிங்கம்,
1, 2 எதிரிகளின் முகவரி
பெருமாகவுண்டனூர், பெரியசோரகை கிராமம்,
மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம். ...... எதிரிகள்

இந்த வழக்கானது **14.05.2026**–ம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும்**, 1, 2** எதிரிகள் தரப்பில் திரு.**K.P.**சுவாமிநாதன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. **அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்** : கடந்த **1977** முதல் **1983** வரை சேலம் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகவும் மாநில நிர்வாக குழு உறுப்பினராகவும், இருந்து வந்த நங்கவள்ளி காவல் நிலைய சரகம், பெரியசோரகை கிராமம் பெருமாகவுண்டனூரைச் சேர்ந்த இறந்து போன அர்த்தனாரி வாத்தியாருக்கு நினைவிடம் கட்டியுள்ளார்கள். அந்த நினைவிடத்தின் அருகில் கடந்த **05.01.2022**ம் தேதி அர்த்தனாரி வாத்தியாருக்கு நங்கவள்ளி ஒன்றிய குழு சார்பில் மணிமண்டபம் கட்ட அடிக்கல் நாட்டி கல்வெட்டு வைத்துள்ளார்கள். கடந்த **07.01.2024**ம் தேதி மாலை **3.00**

மணியளவில் சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் நங்கவள்ளி காவல்நிலைய சரகம் பெரியசோரகை கிராமம் பெருமாகவுண்டனூரைச் சேர்ந்த காலம் 11ல் கண்ட 1ஆம் எதிரி ராஜசேகரன், 2ஆம் எதிரி ராஜ்குமார் இருவரும் அர்த்தனாரி வாத்தியாருக்கு மணிமண்டபம் கட்ட அடிக்கல் நாட்டிய ரூ.500 மதிப்புள்ள கல்வெட்டை உடைத்துள்ளார்கள். எனவே 1, 2 எதிரிகள் இருவரும் இ.த.ச. பிரிவு 427–ன்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளவராகிறார்கள். இறுதியாக நங்கவள்ளி காவல் ஆய்வாளர் **சட்டப்பிரிவு 427 IPC –ன்** கீழ் குற்ற இறுதி அறிக்கை கடந்த **18.01.2025 –ம்** தேதி தாக்கல் செய்துள்ளார்.

2. **புலன்கொள்ளப்பட்ட சட்டப்பிரிவுகள்:** மேற்படி செயல் குற்றவன்முறை அச்சுறுத்தி பறித்தல் சொத்தழிப்பு செய்தல் அத்துமீறி, அடாவடியாக அச்சுறுத்தி சொத்தின் அடையாளத்தை மாற்றிய செயல் **இந்திய தண்டனை சட்டப்பிரிவு 427–ன் கீழ் குற்றசெயல்கள் புரிந்துள்ளதாக** இந்த தனிப்புகார் கடந்த 18.01.2025–ஆம் தேதி இந்த நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் இ.த.ச. பிரிவுகள் 427 –ன் கீழான குற்றச்சாட்டுக்கு போதுமான குற்ற முகாந்திரங்கள் இருப்பதாக கருதி இந்த நீதிமன்றம் கடந்த **16.06.2024–ஆம்** தேதி **C.C. 247 of 2024** என்ற எண்ணில் கோப்புக்கு எடுத்துக்கொண்டு விசாரணை மேற்கொண்டது.

3. மேலும் இதற்கு முன்னதாக **CC.247/2024** என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு **05.07.2024**ம் தேதி **கு.வி.மு.ச. பிரிவு பிரிவு 207–ன்** கீழ் நகல்கள் வழங்கப்பட்டது. அதன் பின்னர் **11.07.2024**ம் தேதி எதிரிக்கு எதிராக குற்றம்சாட்டு வனையப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வந்தது.

4. இதனிடையில், இந்த வழக்கு புகார்தாரர் தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருந்த போது, கடந்த 07.01.2024–ஆம் தேதி, மேற்படி வழக்கு சம்பவத்தில் எதிரி ரூ.500/– மதிப்புள்ள கல்வெட்டை சேதப்படுத்தியது தமிழ்நாடு பொது சொத்துக்கள் சேததடுப்புச்சட்டம் பிரிவு 3(i)–ன் கீழான குற்றச்சாட்டுக்கான முகாந்திரங்களை ஏற்படுத்தும் என்பதால், மாண்புமிகு சென்னை

உயர்நீதிமன்றத்தின் **Criminal RC (MD) No.869 of 2022, Mangalanatha Durai and Others vs. State Through the Inspector of Police, Bazaar Police station, Ramanathapuram. In Crime No.692 of 2016**, என்ற வழக்கில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்றி, **கு.வி.மு.ச. பிரிவு 323–ன் படி** மேல் விசாரணைக்கு அனுப்பப்பட வேண்டிய வழக்கு என்று தீர்மானித்து C.C. 247 of 2024 என்ற வழக்கை P.R.C. 2 of 2026 ஆக மாற்றம் செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆகவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பேரில் ஏற்பட்ட குற்ற வழக்கானது மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கது என்பதால் வழக்காவணங்களை மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்புகை செய்து **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு பிரிவு 232(a)**–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

(a) மேலும் இவ்வழக்கின் எதிரி பிணையில் இருந்து வருவதால் தொடர்ந்து விசாரணைக் காலங்களிலும் அவ்வாறே இருந்து வர கு,வி,மு.ச. பிரிவு 209(ஆ)–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

(b) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை மற்றும் தாக்கல் செய்யப்படவில்லை.

(c) இவ்வழக்கின் விசாரணையைத் தொடர்ந்து மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேற்கொள்ள சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞருக்கு அறிவிப்பு அனுப்ப **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 232(d)–ன்** கீழ் உத்தரவிடப்படுகிறது.

(d) எதிரி வழக்கு விசாரணையின் போது வழக்கறிஞர் வைத்துக் கொண்டுள்ளார்கள். அமர்வு நீதிமன்ற விசாரணையின் போது வழக்கறிஞர் வைத்துக்கொள்ள வசதி உண்டா என்று வினவியபோது எதிரி வசதி உண்டு என்று தெரிவித்தார். எதிரிகளை இவ்வழக்கு விசாரணையின் பொருட்டு மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், சேலத்தில் **15.06.2026–ம்** தேதியன்று ஆஜர்படுத்துமாறு

உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு **14.05.2026**-ம் தேதியன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**